Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 2



















Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 2



# INDEX


| | |
|---|---|
| DOG & DONKEY | 1-6 |
| GHOST HELP | 7-12 |
| EFFICIENCY | 13-24 |
| HAUNTED HILL | 25-33 |
| HONESTY | 34-40 |
| FLYING FOX | 41-47 |
| HALLUCINATION | 48-56 |
| MOTHER'S LOVE | 57-62 |
| ONE WHO NEVER MADE A MISTAKE | 63-70 |


நாயும் கழுதையும்


கழுதை, சொந்தக்காரர் தரும் உணவை சாப்பிட்டு விட்டு சந்தோஷமாக , ஒழுக்கமாக வேலை செய்யும் பிராணியாகும்
நாய்க்கு சொந்தக்காரர் தரும் உணவின் அளவு குறைவாக இருந்தது அது எப்போதும் குறை சொல்லிகொண்டே இருக்கும் .
நம் சொந்தக்காரருக்காக, இவ்வளவு உழைத்தும், அவர் நமக்கு உணவு மிகவும் குறைவாக்கொடுக்கிறார். இதற்காக நாம் போராட்டம் நடத்த வேண்டும்.
கிடைத்ததை கொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டும்.
ஒரு நாள் இரவு.
நான் இனி குலைக்க மாட்டேன், அவருக்கு நான் ஒரு பாடம் கற்றுத்தரப் போகிறேன்.


என்ன செய்கிறாய் ?
குலைத்து அவரை எழுப்பு.
இல்லை. நான் குலைக்கப்போவது இல்லை,
அவருக்கு நல்ல பாடம் கற்றுக்கொடுத்து,
அவருக்கு நம் முக்கியத்துவத்தை புரிய
வைக்கபோகிறேன்.
நீ குலைக்கவில்லை என்றால்
நான் கத்தி அவரை எழுப்புவேன்.
உனக்கு தெரியுமா ? நடு ராத்திரியில்
கழுதை கத்தினால், குச்சி எடுத்துக்கொண்டு
அடிக்கவருவார். அதனால் என்
வழியில் குறுக்கிடாதே.


நான் ஒரு திருட
னை நம் சொந்தக்காரர் வீட்டிற்குள்
செல்ல விடமாட்டேன் . அதனால் நீ
குலை அல்லது நான்
கத்தி விடுவேன்.
அவர் எனக்கு போதுமான உ
ணவை தரவில்லை. அதனால்
நான் எதற்கு கவலைகொள்ள
வேண்டும் ??
வேண்டுமானால், நீயே கத்து.
YOOUK
DUMM


யார் அது ?
ஆ ஆ...
எவ்வளவு தைரியம் உனக்கு ?
எப்படி என் வீட்டில் திருட வருவாய் நீ ?
நல்ல காரியம் செய்தாய்


WWOB
இப்போது புரிந்ததா, நீ செய்தது தவறென்று. அதனால் தான் அவர் உன்னை தண்டித்தார்.
நான் இன்று அடிவாங்கினேன், ஆனால் அவருக்கு என் முக்கியத்தைப் புரிய வைதேன், இல்லையென்றால் என்னை பற்றிய தவறான கருத்தும் என்னுடைய நிலையும் மாறாது
நாய் சரியாகச் செய்தது. இன்று எல்லா செல்லப் பிராணி யாக உள்ள நாய்களும் கழுதையை விட அதிக மரியாதை பெறுகின்றன கழுதையின் நிலைமையில் ஒரு மாற்றமும் இல்லை.
முடிவு.


ஆவியின் உதவி


தயாளுவிற்கு உணவு என்றால் மிகவும் பிடிக்கும். வெளியில் கிடைக்கும் எந்த உணவையும் சாப்பிடத் தவற மாட்டான்.
தயாளு எப்பொழுதும் கல்யாணம், விழா, பண்டிகைகளை எதிர்பார்த்து கொண்டிருப்பான்.
கல்யாண உணவை சாப்பிட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன.
ஒரு நாள்.. சில வாத்தியக்காரர்கள் அவனது வீட்டின் முன் பேசிக்கொண்டு செல்வதைக்கேட்டான்
எல்லோரும் தயாராகுங்கள், பக்கத்து கிராமத்தில் வாசிப்பதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. பண்ணையாரின் மகனுக்கு திருமணம்


மூன்று நாள் கல்யாணம். அதனால் நாம் அங்கேயே தங்க நேரிடும்
ஆஹா...நல்லது ... நல்ல பணமும் கிடைக்கும், நல்ல சாப்பாடும் கிடைக்கும்.
கல்யாண சாப்பாட்டை சாப்பிட . நாம் அங்கு சென்றால் என்ன ?
ம்ம்ம்ம்....யாருக்கும் என்னைத் தெரியாது. பெண் வீட்டுக்காரர்கள் நாம் பையன் வீட்டிலிருந்து வருகிறோம் என்றும். பையன் வீட்டுக்காரர்கள் நாம் பெண் வீட்டிலிருந்து வருகிறோம் என்றும் நினைத்துக் கொள்வார்கள். நான் கூட்டத்தோடு கலந்து விடுவேன்.
அடுத்த நாள்.. தாயாளு பக்கத்து கிராமத்துக்கு செல்லத் தயாரானான்


தயாளு பாதிவழியில் செல்லும் போதே இருட்டியது.
நான் வேகமாகச் சென்றால், இரவு உணவை உண்ணலாம்.
நடக்கும் போது உணவை பற்றியே சிந்தித்தான்? இனிப்பு !!!!
திடீரென்று... ஒரு பேய் அவன் முன்னால் வந்தது.
எவ்வளவு தைரியம் இருந்தால், என் முன்னே வருவாய்.. போய்விடு..
கடவுளே... சாப்பாடு போனால் போகட்டும்.. ஆனால் இனி ஒரு அடி எடுத்துவைத்தாலும் இந்த பேய் என்னை கொன்றுவிடுமே ??
இன்னும் நான்கு பேய்கள் வந்து தயாளுவை பயமுறுத்தின. அவன், திரும்பி வீட்டிற்கு ஓடத்தொடங்கினான்
இனி இந்த பக்கம் திரும்பாதே.



தயாளு, என்னதான் வேகமாக ஓடினாலும், அவன் வீட்டிற்கு திரும்பும்போது விடிந்து விட்டது.
தயாளு பயத்தால் சோர்வடைந்து வீட்டு வாசலிலேயே மயக்கம் அடைந்தான். இதை கண்ட கிராமத்து மக்கள், மருத்துவரை அழைத்து வந்தனர்.
தயாளு, என்ன ஆயிற்று?
பேய்..பேய்....
தயாளு, முழுக்கதையையும் கூறினான்.
அடுத்த முறை, மந்திரவாதியை கொண்டு அந்த பேய்களை ஓட்டுவேன்.
சரி... ஆனால் குணமானதுக்கு பிறகு இதை செய்.
ஒரு நாள்... தயாளு, குணமடைந்த பின், வீட்டைவிட்டு செல்லும்போது , அந்த உணவை நினைத்து வருத்தம் அடைந்தான்.
எப்படி இருக்கிறாய் தயால் ? உனக்கு விஷயம் தெரியுமா ?


என்ன
விஷயம் ?
சில தீவிரவாதிகள் பக்கத்து நாட்டை
தாக்கினர். பண்ணையார் வீட்டின்
கல்யாணத்துக்கு சென்ற அத்தனை
பேரிடமும் கொள்ளைஅடித்துவிட்டு
அவர்களை கொன்றுவிட்டனர்.
என்ன கொலையா ?.
கடவுளே...
ஆம்...
தயாளு,. மிரண்டுபோய்
வீட்டிற்குள் சென்றான்..
கடவுளே.. நல்ல வேளை...
பேய்கள் வந்ததால், நான்
தப்பித்தேன். அது என்
உயிரை காப்பாற்றியது.
ஆஹா.. என்ன ஒரு மாயம்...
பேய்கள் தெரிந்தோ தெரியாமலோ,
அந்த கொலைகாரர்களிடமிருந்து
என்னை காப்பாற்றின
முடிவு.

# திறமை




எடின்பர் நகரத்தில், மிஷெல் என்கிற பணக்காரன் இருந்தான்.
மகளே, உன் தாய் இறந்தபின், நான் உனக்கு அப்பா பாசமும், அம்மா பாசமும், இரண்டையும் தந்திருக்கிறேன்.
எனக்கு தெரியும் அப்பா.
எலிசபெத், இது உன் திருமண வயதாகும். உனக்கு நிறைய வரன் வருகிறது மகளே.
அப்படியா..
அப்பா, நான் ஒன்று கூறட்டுமா.?
என்ன சொல்லபோகிறாய்?




**ஒரு நாள், ஸ்டுவார்ட் என்கிற இளைஞன் ஹம்ச்பயர் நாட்டிலிரிந்து, எலிசெபெத்தை பார்க்க வந்திருந்தான். ஸ்டுவார்ட்டுக்கு எலிசெபெத்தை பிடித்திருந்தது.அவன் மைகேலின் சம்மதத்தை கேட்கிறான்.அதற்கு மைகேல் அவனிடம் ஒரு கேள்வி கேட்கிறான்.**







ஸ்டுவார்ட் அந்த இடத்தை விட்டு போனான். மைகேல்தனது மகளை அழைத்தான்.
மகளே, அவனுக்கு நமது வீடு மிகவும் பிடித்திருக்கிறது. அது ஏனென்றால், மகாராஜாவின் மாளிகையை வடிவமைத்தவனும் நம் வீட்டை கட்டியவனும் ஒருவனே.
அப்பா...எனக்கு யோசிக்க இரண்டு நாள் அவகாசம் தாருங்கள்.
அப்பா, அவன் சொன்ன விடை என்னை திருப்திப் படுத்தவில்லை. இதற்கான காரணம் சமயம் வரும்போது தெரிவிக்கிறேன்.
எலிசெபெத், அவள் தோழியிடம், இரகசியமாகஎதையோ கூறி அனுப்பினாள்
அடுத்த நாள், பிரான்க் என்பவன் பிரிட்டன் நாட்டிலிருந்து எலிசபெத்தை காண வந்தான். முன்பு அவன் ராஜாவின் மாளிகையில் தோட்டக்காரனாக வேலை செய்து வந்தான் அதனால், அவன் ராஜாவின் நெருங்கிய நண்பன் ஆனான்.


இதை அறிந்த மைகேல், தன் மகளுக்கு பிரான்க் மிகவும் பொருத்தமானவன் என்று எண்ணினான். ஏனெனில், அவன் அரசனிடம் மிகவும் மதிப்பு வைத்திருந்தான். அதனால் அதே கேள்வியை இவனிடமும் கேட்டான்.
ஐயா, உங்களின் தோட்டம் மிகவும் நன்றாகஉள்ளது. நன்கு பராமரிக்கப்பட்டு மிகவும் அழகாக உள்ளது. அதில் விதவிதமான காய்கனிகளும் , அழகான பூக்களும் உள்ளன.
பிரான்க், புறப்பட்டுச்சென்றான்..
மகளே..எப்போதெல்லாம் நான் வெளியூர் செல்கிறேனோ, அப்போதெல்லாம் வித விதமான செடிகளை வாங்கி வந்து நடுவேன். அவன் ஒரு தோட்டக்காரன் அதனால் அவனுக்கு நம் தோட்டம் மிகவும் பிடித்திருக்கிறது.
எலிசெபெத் சிந்திக்க இன்னும்சில நாள் அவகாசம் கேட்டாள்.
திரும்பவும், எலிசெபெத், அவள் தோழியிடம், இரகசியமாகஎதையோ கூறி அனுப்பினாள்.


அப்பாஎன்னை மன்னியுங்கள், அவன் சொன்ன விடை என்னை திருப்திப்படுத்தவில்லை. என்னால் அவனை திருமணம் செய்து கொள்ள இயலாது.
ஒரு நாள் ஒரு இளைஞன் மைக்கேலின்வீட்டிற்கு வந்து ஒரு கடிதத்தை கொடுத்தான்.
ம்ம்...நீங்கள் வாட்சனின் மகன் அல்லவா ? நீங்கள் இங்கே வந்தது எனக்கு மிகவும் சந்தோஷம்.சில நாட்கள் நீங்கள் எங்களோடு தங்கி இருக்கவேண்டும்..
மைக்கேல் அவரது மகளை அறிமுகப்படுத்துகிறார்.
மகளே, இவன் மார்க், என் நண்பர் வாட்சனின் மகன். இவரின் தந்தை எனக்கு மிகவும் உதவி செய்திருக்கிறார். அவரில்லையேல் நாம் இப்படி வாழ்ந்திருக்க முடியாது.
எப்படி அப்பா ?
சிலவருடங்களுக்கு முன்பு, நான் வெளிநாட்டிற்கு சென்றிருந்தேன். நாடு திரும்பும்போது, சிலகடற்கொள்ளையர்கள் எங்கள் கப்பலைத்தாக்கி,எல்லாவற்றையும் திருடிச்சென்றனர்.


அப்போது, வாட்சன் தான் எனக்கு பணம் கொடுத்து உதவி, என் தொழிலை மறுபடியும் ஆரம்பித்துக் கொடுத்தான்.
ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர் தொழிலில் நஷ்டமடைந்து பணத்தை இழந்ததால், சில வருடங்களுக்குமுன் இறந்து விட்டார்.
மகளே கடவுள் என் கடனைதீர்க்க எனக்கு நல்ல சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறார். இவனை நீ திருமணம் செய்து கொண்டால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.
எனக்கு யோசனை செய்ய சிறிது அவகாசம் கொடுங்கள், அப்பா.



மைகேல் மார்க்கை விருந்தினர் அறைக்கு அழைத்துச்சென்று வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்துகொடுத்தார்..
எலிசபெத்தின் அறையில்..
சூசன்,நம் விருந்தினர் என்ன செய்துகொண்டு இருக்கிறார்? என்றுபார்த்து வா
சூசன் மார்க்கை கண்காணித்து விட்டு, எலிசபெத்திடம் அவனுக்கு காய்ச்சலாக இருப்பதால் நாள் முழுவதும் நன்றாக உறங்குவதாகக் கூறினாள்.


எளிசெபெத்  தன் தந்தையிடன் சென்று அச்செய்தியை சொல்கிறாள், அவர் அவனுக்கு மருந்து கொடுக்கிறார்.
அடுத்த நாள், மைகேல் எலிசபெத் மற்றும் மார்க்குடன் வரவேற்பறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.
மகனே, எப்படி இருக்கிறாய் ?
இப்போது கொஞ்சம் பரவாயில்லை.
மகனே, , நான் உனக்கு பணம் தருகிறேன். நீ உன் ஊருக்குச் சென்று உன் சொந்தத்தொழிலை தொடங்கு.
அப்பா, அவருக்கு உடம்பு சரியில்லை, இதை பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம்.
ஆனால், எலிசெபெத் எனக்கு, அவன் இங்கு வெகு நாட்கள்தங்கி இருப்பது பிடிக்கவில்லை.


ஏன் அப்பா ?
மகளே, அவன் இங்கு வெகு நாட்கள் தங்கி இருந்தால் உன்னை மணக்க விரும்புவான், அது நடக்கக் கூடாது.
ஆனால் அப்பா நான் அவனை மணக்க விரும்புகிறேன்.
என்ன?
ஆமாம் அப்பா.அதுமட்டும் காரணமல்ல வேறு காரணமும் உள்ளது எல்லோரிடமும் ஒரு கேள்வியை கேட்டது, அவர்களின் மனதை புரிந்து கொள்ளவே.
எனக்கு புரியவில்லை?
என்ன சொல்கிறாய் ? மற்றவர்களுடன் ஒப்பிட்டு பார்த்தல், அவன் உனக்கு சரியான இணையில்லை; நாம் அவரிடம் எந்த ஒரு கேள்வியையும் கேட்கவில்லை. நீ எனக்காக இந்த முடிவை எடுத்திருந்தால் நான் உன்னை மிகவும் பாராட்டுகிறேன். ஆனால்,


அவர்களிடம் நான் என் கேள்வியை கேட்ட உடன், என் தோழியை அவர்களை பற்றின விவரம் அறிய அனுப்பினேன்.
ஸ்டுவர்ட்டின் வீடு நம் மாளிகையை விட சாதாரணமானதாக இருக்கும். அதனால் அவனுக்கு நம் மாளிகைமீது தான் அதிக ஆசை.
பிரான்க்கும் நம் தோட்டத்தின் மீது தான் ஆசை அதிகம். அதனால் அவர்களை நான் கல்யாணம் செய்யபோவதில்லை.
அதனால் இருவருமே இந்த சொத்துகளை அடையவே என் மேல் விருப்பம் கொண்டுள்ளார்கள். ஆனால் மார்க் விஷயம் அப்படியில்லை.
அவன் தூங்கிக்கொண்டிருக்கும்போது, என் பெயரை சொல்லிகொண்டிருந்தான். அவனுக்கு நம் சொத்து மீது எந்த ஒரு ஆசையும் இல்லை.



காரணம், அவனுக்கு நான் கிடைப்பேனா மாட்டேனா என அவன் உள்மனதில் ஏற்பட்ட பயம்தான்.அதில் அவனுக்கு காய்ச்சலே வந்துவிட்டது. இப்போது சொல்லுங்கள் அப்பா, எனக்கு பொருத்தமானவர் மார்க்கா, இல்லை மற்றவர்களா?
நான் உங்களை கண்டு ஆனந்தம் அடைகிறேன். வாழ்க வளமுடன்.
மிஷேல் தன் மகளின் திறமையைப் பார்த்து ஆனந்தம் அடைந்தான்.
எலிசபெத்தும் மார்க்கும் திருமணம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.
மிஷேல் தன் தொழிலை மார்க்கிடம் ஒப்படைத்ததுடன், அவன் கடனையும் அடைத்தான்.
முடிவு.


மாய மலை


லக்ஷ்மியும் ஜக்குவும் தம்பதியர். ஜக்கு ஒரு குடிகாரன்.
ஜக்கு நாள்முழுவதும் அவன் நண்பர்களோடு சேர்ந்துகொண்டு குடித்துக்கொண்டும் சூதாடி கொண்டும் பொழுதை கழித்தான். லக்ஷ்மி வேலை செய்துபொருள் சம்பாதித்தாள்.
ஜக்கு, எப்பொழுதும் லக்ஷ்மியை குடித்துவந்து அடிப்பான். அவளிடமிருந்து பணத்தை பறித்து கொண்டு சூதாடுவான். லக்ஷ்மி அவளின் வாழ்க் கையை நினைத்து மிகவும் வேதனை அடைந்தாள்.
ஒரு நடு ராத்திரியில்....
ஹே... லக்ஷ்மி எழுந்திரு...எனக்கு குடிக்க பணம் கொடு..


என்னிடம் பணமில்லை ...
என்ன வேண்டுமானாலும்
செய்துகொள்ளுங்கள்.
எதிர்த்தா பேசுகிறாய் .. !!!
இரு.... உன்னை நான்
பேய்மலையில்
கொண்டு விடுகிறேன்.
உன்னை விட அந்த
பேயே எவ்வளவோ
மேல். உங்களுடன்
போராடி
அலுத்துவிட்டது.
ஏன் இன்னும் இங்கு
இருக்கிறாய் ??
போ...
சரி..நான்
போகிறேன்..


லக்ஷ்மி கோபத்தில் வீட்டை விட்டு சென்று, அந்த மாய மலையை நோக்கிச் செல்கிறாள்.
லக்ஷ்மி ஒரு மரத்தின் அடியில் நின்றுகொண்டு கத்த ஆரம்பித்தாள்.
எங்கே இருக்கிறாய் ?? என் முன்னே வா......
அப்போது அவளெதிரே ஒரு பேய் தோன்றியது.
யார் நீ ? ஏன் கத்துகிறாய்?
என் பெயர் லக்ஷ்மி. நான் தற்கொலை செய்துகொள்வதற்காக வந்திருக்கிறேன். என் வாழ்க்கை எனக்கு பிடிக்கவில்லை.


இல்லை....இல்லை... அப்படி எதுவும் செய்துவிடாதே.
ஏன் கூடாது? நீ யார் என்னை னத்தடுக்க?
பாரம்மா, அமைதியாக நான் சொல்வதைக்கேள்.
ஒரு பெண் இங்கு வந்து தற்கொலை செய்து கொள்வாள் என்று எங்களின் தலைவர் முன்னரே கணித்து கூறியுள்ளார்.


அவள் இறந்த பிறகு, இங்கு உள்ள பேய்கள் அனைத்தையும் அடிமையாக நடத்துவாள்.
மன்னித்து கொள்ளுங்கள். நான் தற்கொலை செய்துகொள்ளப்போகிறேன். என்னால் தினம் தினம் சித்திரவதையை அனுபவிக்க முடியவில்லை.
சரி..உன் கஷ்டத்தை என்னிடம் கூறு. நான் உனக்கு உதவுகிறேன்
என் கணவரும் நானும் ஏழை. அவர் ஒரு குடிகாரர். எந்த வேலையும் செய்வதில்லை. நான் என்னாலான அனைத்து வேலைகளையும் செய்து, குடும்பத்திற்காக சம்பாதிக்கிறேன். ஆனால் அவர் குடிப்பதற்கும் சூதாடுவதற்கும், என்னை அடித்து பணத்தை எடுத்துக்கொள்கிறார்.


அதனால், நான் தற்கொலை செய்துகொண்டு என் வாழ்வை முடித்துக்கொள்ளபோகிறேன். நான் இந்த முடிவை மாற்றிக் கொள்ளப்போவதில்லை.
இல்லை.. இல்லை... பணம் தான் உன் கவலை க்குகாரணம் நான் அதற்கு உதவுகிறேன். சொல்வதை கேள்.. இதற்காக தற்கொலை செய்யாதே.
இந்த மலையின் அடியில் இரண்டு பானைகள் நிறைய தங்கம் உள்ளது.
இதை எடுத்துச்சென்று உன் கணவரிடம் கொடு. அவர் உன்னை அடிக்கமாட்டார்.


ஹ்ம்ம்...பணம் தான் என் கவலையாக இருந்தது. ஆனால் இப்போது அந்த கவலை தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன்.
என்னை காப்பாற்றியதற்கு மிக்க நன்றி.
லக்ஷ்மி அந்த 2 பானை தங்கத்தை எடுத்துக்கொண்டு வீடு திரும்பினாள்.
இதனிடையில் ஜக்கு அவன் தவறை உணர்ந்து, லக்ஷ்மியை தேடிக்கொண்டு வருகிறான். அவளை நிரந்தரமாக இழந்துவிடுவோமோ என்று பயந்தான்.
லக்ஷ்மி !! எங்கே சென்றாய் ?? கடவுளே அவளுக்கு ஒன்றும் ஆகக்கூடாது.


லக்ஷ்மியும் ஜக்குவும் சந்தித்துக் கொள்கிறார்கள்.
லக்ஷ்மி... என்னை மன்னித்துவிடு லக்ஷ்மி நீ நன்றாக இருக்கிறாயா ? எங்கே போனாய்.., நான் தவறிழைத்து விட்டேன்.
லக்ஷ்மி நடந்ததை விளக்கமாகக்கூறினாள்.
மன்னித்துவிடு லக்ஷ்மி. இனி நீ எந்த வேலையும் செய்யவேண்டாம். நான் வேலை செய்து பணம் சம்பாதித்துகொண்டு வருவேன் நாம் இந்த பணத்தை வைத்து புது வாழ்க்கையை தொடங்கலாம்.
ஜக்கு குடி மற்றும் சூதாடுவதை நிறுத்திவிட்டு, தன் சொந்தத் தொழிலை செய்ய ஆரம்பித்தான். இரண்டு பேரும் சந்தோஷமாக வாழ்ந்தனர்
முடிவு.


நேர்மை


நல்வரவு.
யார் நீ ? இங்கு ஏன் வந்தாய்?
எங்கள் கவர்னரின் நண்பர் பார்கர், உங்களை பற்றி கூறினார். தாம் பெரிய எழுத்தாளர் என்று கூறினார்.
கிரேக் ஆச்சரியமடைந்தான். ஆனால் அமைதியாக இருந்தான்.


தாங்கள் கதைகள் எழுதுவதிலும் வல்லவர் என்றும் கேள்வியுற்றேன். உங்களை சந்திப்பதில் மிகவும் பெருமை கொள்கிறேன்.
என்னை பற்றியா பேசுகிறீர்கள்.
கிரேக் மிகவும் ஆச்சரியமடைந்தான்.
ஆம், தாங்கள் கிரேக் தானே?
ஆம். நான்தான்


தாங்கள் பெரிய பணக்கார பரம்பரையை சேர்ந்தவர் என்றும், உங்களின் முன்னோர்கள் ஏழை மக்களுக்கு உதவிசெய்தார்கள் அதனாலேயே சொத்துக்கள் அனைத்தையும் இழந்து விட்டார்கள் என்றும் கேள்விப்பட்டேன்.
எங்கள் நாட்டுத்தலைவர் உங்களை சந்திக்க சொன்னார். உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.
என் முன்னோர்களிடம் எந்த சொத்தும் இருந்ததில்லை.
என்னிடம் இப்போது உள்ள சொத்துக்கள் அனைத்தும் என் கடும் உழைப்பால் சேர்த்தது.


கிரேக்கு, அவனைப்பற்றியும் அவர்களின் முன்னோர்களைப் பற்றியும் நல்ல விதமாக கேட்டவுடன் மனதிற்குள், ஆனந்தம் அடைந்தான்.
தாங்கள் வந்ததின் காரணத்தை இன்னும் சொல்லவேயில்லையே.
எங்கள் கவர்னர் உங்களை அவரின் முக்கிய ஆலோசகராக நியமிக்க ஆசைப்படுகிறார். அதற்காகவே இங்கு வந்துள்ளேன்.
ஆனால் தங்களை சந்தித்தபின், அவர் வேறொருவரை நியமிக்கலாம் என்று நினைக்கிறேன்.


கிரேக், அவனுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று எண்ணி வருத்தம் அடைந்தான். ஆனால் அவன் அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.


தலைமை ஆலோசகர் நேர்மையாக இருக்க வேண்டும். எவரேனும் அவரிடம் இல்லாத ஒரு குணத்தை பாராட்டினார்கள் என்றால், அதை மறுத்து ஒப்புகொள்ளும் தன்மை உள்ளவராக இருக்கவேண்டும்.


ஒரு விஷயத்தை நான் உங்களுக்குச்சொல்ல விழைகிறேன். தங்களின் நேர்மையை தாங்கள் சோதித்துக்கொள்ள வேண்டும்.


கிரேக் அவனின் தவறை உணர்ந்துகொண்டான்.
ஐயா, நான் ஒரு எழுத்தாளரும் அல்ல கதை எழுதுபவனுமல்ல. அதுமட்டுமல்ல என் முன்னோர்களிடம் எந்தவொரு சொத்துக்களும், இருந்ததில்லை. அதனால், தயவுசெய்து உங்களின் தீர்மானத்தை சற்று மாற்றிகொள்ளுங்கள்.
கிரேக் அவர்களே, உங்கள் தவறை மிகவும் தாமதமாக உணர்ந்திருக்கிறீர்கள்
முடிவு.

# பறக்கும் நரி





நரி பறவைகளின் வாழ்க்கையை மிகவும் ரசித்தது.
நண்பர்களே கூறுங்கள், பறவையாய் இருக்கும் உங்களுக்கு, உங்கள் வாழ்கை பிடித்திருக்கிறதா அல்லது நிலத்தில் வாழும் மிருகங்களின் வாழ்க்கை பிடித்திருக்கிறதா?.
நண்பா, எனக்கு என் வாழ்க்கை மிகவும் பிடிக்கும். எனக்கு இந்த இடம் சலித்து விட்டால் வேறொரு வனத்தில் வாழவேண்டும் என்றால் நான் எளிதாக பறந்து சென்று விடுவேன் ஆனால் நிலத்தில் வாழும் மிருகங்களுக்கு அது சாத்தியம் இல்லை.
உங்களுக்கு நிர்ப்பந்தங்கள் அதிகம் முதலில், ஒரிடம் விட்டு மற்றோரிடம் செல்ல நடக்கவேண்டும். மனிதர்களால் தங்களுக்கு ஆபத்து உள்ளது. தாங்கள் எதுவும் செய்யவில்லை என்றாலும், உங்களை அச்சுறுத்திக்கொண்டே இருப்பார்கள் மற்றும் கொல்லுவார்கள் எங்களுக்கு இந்த கவலை ஏதும் இல்லை, அதனால் எனக்கு என் வாழ்க்கை மிகவும் பிடிக்கும்.


நண்பா, நீ பெரிய ஊர்களில் எல்லாம் பறந்து திரிகிறாய் நான் பறப்பதற்கு ஏதேனும் வழியுள்ளதா?
நண்பா இது தேவையற்ற யோசனை. அப்படி ஏதேனும் இருந்தால், மிகவும் புத்திசாலிகளான மனிதர்கள் முயற்சித்திருப்பார்கள். அவர்கள் கார்களையும், விமானத்தை யுமே நம்பியுள்ளார்கள். அதனால் உன் முட்டாள்தனமான யோசனையை விட்டுவிடு.
காகத்தின் உதவி தனக்கு கிட்டாது என்றெண்ணிய நரி மரத்தின் மீதேறி காகத்தின் கூட்டை அடைந்தது .


நரி காகத்தின் வருகைக்காக காத்திருந்தது.
நண்பா, எனக்கு நீ உதவி செய்யாவிடில்....
என்குஞ்சுகளை நான் எவ்வாறு இந்த நரியிடமிருந்து காப்பாற்றுவேன் ? நான் இப்போது என்ன செய்வது ? ம்ம்ம்... நல்ல யோசனை...
சரி..நண்பா ... நான் உனக்கு உதவுகிறேன். அதற்கு முதலில் உனக்கு சிறகுகள் வேண்டும்.
ஓ......... சிறகுகள்! அது எப்படி கிடைக்கும் ?
கவலைப்படாதே.. நான் நகருக்குள் சென்று, உன்னை எப்படி பறக்க வைப்பது என்று பார்த்துவருகிறேன்.
இந்த பலூன்களை நான் நரியின் முதுகில் கட்டினால், அது காற்றின் உதவியுடன் நரியை மேலே இழுக்கும்.
CITY TOURISM OFFICE


காகம், நகருக்குள் சென்று பலூன்களை வாங்கிவந்து, நரியின் முதுகில் கட்டியது.
CITY TOURISM OFF
காகம் நரி பறப்பதற்கு தேவையான பலூன்களை வாங்கிவந்தது.
ஆஹா... நான் பறக்கிறேன் நண்பா... மிக்க நன்றி..


நண்பா, எனக்கு பசிக்கிறது...
நான் எப்படி கீழே இறங்குவது ?
ஹ்ம்ம்........ஒரு யோசனை..
காகம், ஒவ்வொரு பலூன்களாக
உடைத்துக்கொண்டே வர ,
அந்த நரி கிழே இறங்கியது.
ஆஹா.. நல்லது.. ஆனால்
கொஞ்சம் மெதுவாக செய்..
நரி... நதியின் மேலே
பறந்து கொண்டிருப்பதை
கவனிக்க வில்லை.
நிறுத்து... என்னால்
தண்ணீரில் இறங்க
முடியாது....நிலத்தில்
இறக்கு...நிறுத்து நண்பா.


நண்பா... உனக்கு உன் வாழ்க்கை எவ்வளவு முக்கியமோ அதுபோல் தான் எனக்கும் என் குஞ்சுகளுக்கும். நான் போய்வருகிறேன்.
எல்லா பலூன்களையும் உடைத்தவுடன்.. அது தண்ணீரில் போய் விழுந்தது.
இது ஒரு நல்ல பாடத்தை அதற்கு கற்றுக்கொடுக்கும்.
கடவுளே.........பறக்கவேண்டும் என்ற என் ஆசையானது, இயற்கைக்கு எதிரான செயல். அதனால் தான் எனக்கு இந்த நிலை.......
முடிவு.


மாயத்தோற்றம்


ஒரு நாள் தீனுவுக்கு காய்ச்சல் அதிகமாக இருந்தது. ஆனாலும் அவன் ஆட்டை காட்டிற்கு அழைத்துசென்றான்.
நாள் முழுவதும் நீ சோம்பேறியாக இருக்கிறாய். நீ ஒரு உதவாக்கறை.
என்ன என் தலைவிதி; என் மனைவி என்னை நாள் முழுவதும் சபிக்கிறாள். எனக்கு சாப்பாடுகூட சரியாக கொடுப்பதில்லை. இப்படி ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு பதிலாக நான் சாகலாம்.
முட்டாளே, அந்தக் கிளையோடு சேர்ந்து நீயும் கீழே விழுவாய்!


முனிவரே.. என் வாழ்க்கையை தாங்கள் நன்றாக பார்க்கிறீர்கள்.. தயவுசெய்து நான் சாகவேண்டும் என்று சபித்துவிடுங்கள்.
நீ கீழேவிழுந்தும், உயிரோடிருக்கிறாய் என்றுசந்தோஷப்படு.மகனே நீ ஏன் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தாய்?
முனிவரே.. என் மனைவி எப்போதும் என்னுடன் சண்டை போடுகிறாள். அவள் அதிகமான ஆடுகளை சீர்வரிசையாக பெற்று வந்துள்ளதால் என்னை மதிப்பதில்லை தயவுசெய்து என்னை சபித்துவிடுங்கள் முனிவரே..அல்லது நான் உங்கள் கால்களை விட்டுச் செல்லமாட்டேன்.
சரி.. எழுந்திரு மகனே. உன் வியர்வை நெற்றியிலிருந்து வழிந்து மூக்கின் வழியாக உன் வயிற்றை தொடும்போது , நீ இறந்துவிடுவாய்..
முனிவரே.. எனக்கு வியர்வையே வருவது கிடையாது நான் என்ன செய்வது ?
வீட்டிற்குச் சென்று சூடான சூப்பை குடி, உனக்கு வியர்வை வரும்.


ஆடுகள் எங்கே ?
நான் மரணத்தை நோக்கிச் செல்கிறேன். என்னிடம் ஆடுகளைப்பற்றி விசாரிக்காதீர்கள்.
சுடுகாட்டிற்குப் போய் இறந்துவிடு இல்லையெனில் உனக்காக வீண் செலவு செய்யவேண்டும்.
கவலைப்படாதீர்கள்.. நான் அவ்வாறே செய்யப்போகிறேன். எனக்காக தாங்கள் ஒரு ருபாய் கூட செலவு செய்யவேண்டாம்.


அவன் செவ்வக வடிவப் பள்ளம் தோண்டினான். அதில் படுத்துக்கொண்டு தன்னையே கல்லாலும், மண்ணாலும் மூடிக்கொள்கிறான்.
வியர்வை இந்நேரம் என் வயிறுவரை சென்றிருக்கும். நான் இந்நேரம் இறந்திருக்கவேண்டும். ஏன் இன்னும் மரணம் என்னை நெருங்கவில்லை.


இறந்துபோக இவ்வளவு நேரம் ஆகும் என்றுமுன்பே தெரிந்திருந்தால் ஒரு போர்வையை கொண்டுவந்திருப்பேன். குளிர ஆரம்பித்துவிட்டது.
நான் இறந்துவிட்டேன். நீ ஏன் இவ்வளவு நேரம் கழித்து வந்தாய் ? நான் உனக்காக வெகு நேரமாகக் காத்துகொண்டிருந்தேன்
ஏன் இங்கும் அங்கும் பார்த்துகொண்டி. ருக்கிறாய் ? நான் உன் காலடியில் தான் இருக்கிறேன். கீழே பார்.


பேய் ...
பேய் ...
பேய் ...
ஏன் திரும்ப வந்தாய் ? மரணமடைய தைரியம் வரவில்லையா ?
மூடனே.. இன்னுமா மரணிக்க யோசித்துக்கொண்டிருக்கிறாய்? இவ்வளவு நகைகளோடு நாம் சந்தோஷமாக வாழலாம்.
பார்.. மரணம் உனக்காக நகைகளை பரிசளித்திருக்கிறது. அந்த பெட்டியை காலி செய்து என்னை இதில் போடு. மரணம் என்னை தேடி கொண்டிருக்கும்.


நீ ஒரு மூடன். நான் ஏற்கனவே இறந்துவிட்டேன் . என்னை அந்த பெட்டியில் போட்டுவிட்டு, அதை என் வீட்டு வாசலில் வைத்துவிடு.
மரணமே... நான் பெட்டியில் உள்ளேன், என்னை எடுத்துச்செல்.
பேய்...
பேய்...
பேய்...
பேய்...


இறந்து பின் ஆத்மா சித்ரவதை அனுபவிக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன் ஆனால் நான் ஊஞ்சலாடிக் கொண்டிருப்பது போல் உணருகிறேன்
ஆஹா.. நீங்கள் என் கிராமத்தை சேர்ந்தவர்களா ?.. எப்போது இறந்தீர்கள் ? என் மனைவியும் இங்கு இருக்கிறாளே ?
உங்களுக்கு ஏன் இவ்வளவு பிடிவாதம்,வீட்டுக்கு வருகிறீர்களா இல்லையா ?
கடவுளே... என் மனைவியும் இறந்துவிட்டாளா ? என் வாழ்க்கை இங்கும் மாறப்போவதில்லை. எனக்கு வேறு வழியேயில்லை.
முடிவு.


அம்மாவின் அன்பு


முன்னொருகாலத்தில் ஒரு பசு இருந்தது. அதற்கு ஒரு கன்று இருந்தது.
ஒரு நாள் புல் மேய்ந்து கொண்டிருந்தபோது, அது தன் கன்றை விட் டுப்பிரிந்து காட்டுக்குள் தவறிச் சென்றுவிட்டது.
அப்போது, அங்கு ஒரு புலி வந்தது.
நான் உன்னை சாப்பிட போகிறேன்.
என்னை விட்டுவிடு.
அது எப்படி நீ அத்துமீறி என் எல்லைக்குள் வரலாம்? நான் உன்னை விடமாட்டேன்.
என்னை மன்னித்துவிடு, தெரியாமல் வந்துவிட்டேன்.


நீ தவறு செய்து விட்டாய் ,. நான் உன்னை சாப்பிடத்தான் போகிறேன்.
நீ காட்டுக்கே ராஜா. நீ யாரை வேண்டுமானாலும் சாப்பிடலாம், ஆனால் என் குட்டியை யார் பார்த்துக்கொள்வது?தயவு செய்து என் மீது கருணை காட்டு.
புலி ஏற்றுக்கொள்ளவில்லை.
சரி, என் குட்டியை கடைசியாக ஒரு முறை பார்த்துக்கொள்கிறேன்.. நான் அதற்கு பால் கொடுத்து விட்டு நாளை அதிகாலை வந்துவிடுகிறேன்.
இரவில் என் சொந்தக்காரர் என்னை கட்டிப்போட்டு விடுவார். நான் உனக்கு வாக்கு அளிக்கிறேன்,அதனால் நாளை அதிகாலை வந்து விடுகிறேன்.
நீ என்னை இரவு முழுக்க பசியோடு இருக்கச் சொல்லுகிறாயா?



மாடு அழத் தொடங்கியது.
சரி, நான் இதற்கு ஒத்துக்கொள்கிறேன், ஆனால் நீ திரும்பி வரவில்லை என்றால், ,நான் உன் குட்டியையும் சேர்த்து கொன்று விடுவேன்.
அடுத்த நாள் காலையில்,தன் நண்பர்களோடு சேர்ந்து வந்தது பசு.
புலி ராஜாவே, என் குட்டியை கடைசியாக பார்ப்பதற்கு அனுமதி அளித்ததற்கு மிகவும் நன்றி. நான் உனக்கு கடமைப்பட்டிருக்கிறேன்..
இப்போது நீ என்னை கொன்று உன் பசியை தீர்த்துக்கொள்.
அது சரி.ஆனால் இங்கு உன் பசு நண்பர்கள் ஏன் வந்தனர்?
திடீரென்று, கூட்டத்திலிருந்து ஒரு பசு வெளியே வந்தது.
ராஜா,நீ அவளைகொன்றுசாப்பிட்டால், அவளையும் அவள் குட்டியையும் பிரித்து விடுவாய் ஆகவே அதற்கு பதிலாக என்னை தின்றுவிடு.


உனக்கு மூளை குழம்பியதா ? நீ என்ன பேசுகிறாய் என்று தெரிந்து தான் பேசுகிறாயா? அதைக்காப்பாற்ற உன் வாழ்வை தியாகம் செய்வாயா ?
அவள் என் உயிர் தோழி. அதுமட்டும் அல்லாமல், அவளுக்கு ஒரு கன்னுக்குட்டியுள்ளது. நான் நன்றாக வாழ்ந்துவிட்டேன். அதனால் என் வாழ்க்கையை என் தோழிக்காக தியாகம் செய்கிறேன்.
இதைக்கண்டு புலி அதிர்ச்சியடைந்தது, அப்போது மற்றொரு வெள்ளைப்பசு அதன் முன் வந்தது.
ராஜா, அவர்களை விட்டுவிட்டு, என்னை சாப்பிட்டு பசியாருங்கள்..
இல்லை..இல்லை...நான் செய்த தவறுக்காக, வேறு ஒருவர் அவரது வாழ்வை தியாகம் செய்வது தவறாகும்.
இல்லை.. என்னை சாப்பிடு.
இல்லை..இல்லை...எனக்காக என் நண்பர்கள் சாவது பாவமாகும். என்னைத்தான் நீங்கள் சாப்பிட வேண்டும்.


ஒவ்வொன்றாக எல்லாப்பசுக்களும் தன்னைத்தான்
சாப்பிட வேண்டும் என்று புலியிடம் கேட்டன.. புலிக்கு
என்ன செய்வதென்றே தெரியவில்லை.
எல்லா பசுவும், நட்புக்காக
உயிரை விடத்துணியும் போது
நான் யாரை சாப்பிடுவது?
புலி தனது மனதை
மாற்றிகொண்டது.
நான் உங்கள் நட்பையும் அன்பையும் பாராட்டுகிறேன்.
நான் அதை விட்டுவிடுகிறேன். நீ சென்று உன்
குட்டியுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வாயாக..
எல்லாப் பசுக்களும் , புலியின் பெரிய
மனதைப்பாராட்டி , சந்தோஷமாக வீடு திரும்பின.
முடிவு.


தவறே செய்யாத மனிதன்


காபுலிஸ்தான் நாட்டை ஆட்சி செய்பவர் சுல்தான் ஆசிம் கான். அவர் மிக பெரிய மேதாவி ஆவார்.
சுல்தான்னுக்கு ஷாதீயாஹ் என்று ஒரு அழகான பெண் இருந்தாள்.சுல்தான் அவளை மிக அன்பாக வளர்த்துவந்தார்.
ஒரு நாள், சுல்தானும் அவர் மனைவியும், ராஜகுமாரி தோட்டத்தில் உலவுவதைப் பார்த்தார்கள்.
ஷாதீயாஹ் பெரிய பெண்ணா கிவிட்டாள், அவளுக்கு ஒரு நல்ல மணமகன் தேடவேண்டும்.
ஆம் ஆளிமாஹ், அவளுக்கு திருமண வயது எட்டிவிட்டது. நம் திவானிடம் இதைப்பற்றி பேசுகிறேன்.


அடுத்த நாள் திவான் அப்துல் பாரியை கூப்பிட்டார்.
அப்துல், நான் என் புதல்விக்கு திருமணம் செய்ய முடிவெடுத்துள்ளேன். நீ திறமையான, நேர்மையான மனிதன், அதனால் ஒரு நல்ல மணமகனை தேர்ந்தெடுக்க, உதவி செய்.
ஜி ஹுஜூர், கண்டிப்பாக நான் ஒரு நல்ல மணமகனை தேர்ந்தெடுக்கிறேன்..
சில நாட்களுக்கு பிறகு, அப்துல் பாரி சுல்தானிடம் பக்கத்து நாடுகளைச்சேர்ந்த சில அழகான வீரமான ஆண் மகன்களின் படங்களை காண்பித்தார்.
அப்துல், எல்லோரும் அழகாக இருக்கிறார்கள், இதில்யார் பொருத்தமானவர்?
உங்கள் மனதில் என்ன எண்ணுகிறீர்கள்?
சரியான மணமகனை தேர்ந்தெடுப்பதற்கு நான் அவர்களுக்கு ஒரு போட்டி நடத்தப்போகிறேன். ஆகவே அனைத்து இளவரசர்களுக்கும் அழைப்பு அனுப்புங்கள்.
சரி சுல்தான் அவர்களே, அனைவர்க்கும் சரியான முறையில் அழைப்பு அனுப்புகிறேன்.
சுல்தான், எல்லா இளவரசர்களையும் அன்புடன் அழைத்தான்.


எல்லா இளவரசர்களும், அவர்கள் இடத்தில் அமர்ந்தார்கள்..
வணக்கம் இளவரசர்களே... உங்கள் பிரயாணம் நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.
நன்றி சுல்தான் அவர்களே. இந்த மாநகரத்துக்கு வந்ததே எங்கள் பாக்கியம்.
மிக்க மகிழ்ச்சி, ஆனால் என் ராஜகுமாரியை உங்களில் ஒருவருக்கே கொடுக்கமுடியும். அதனால் நான் உங்களுக்கு ஒரு போட்டி நடத்தி என் பெண்ணுக்கு சரியானவரை தேர்வு செய்யவிருக்கிறேன்.
உங்களில் யார் ஒருவர் நான் வாதம்செய்ய முடியாத ஒரு தலைப்பை கொடுக்கிறார்க ளோ அவர்கள் தான் வெற்றியாளர்.
சுல்தானோ ஒரு மேதாவியாக இருந்ததால், இளவரசர்கள் கொடுத்த அத்தனை தலைப்பிலும் வாதம்செய்தார்.


கடைசியாக, அலி முகமது என்கிற புத்திசாலியான பார்க் நாட்டை சேர்ந்தவன் முன்னே வந்தான்.
சுல்தான் அவர்களே, என்னை ஆசிர்வதியுங்கள்.
என் ஆசிகள் எப்போதும் உண்டு நீ பேசத்தொடங்கலாம்.
இளவரசன் உரக்க அவனது பேச்சை தொடங்கினான்.
நான் கொடுக்கும் தலைப்பு என்னவென்றால், காபுலிஸ்தான் நாட்டை சேர்ந்த சுல்தான் ஆசிம் கான் அவர்கள், இளவரசி ஷாதீயாஹ்வின் தந்தையாரா இல்லையா?
தர்பாரில் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். இளவரசன் சிரித்துக் கொண்டே சொன்னான்...
இந்த அமைதியை நான் உங்களின் தோல்வி என்று ஏற்றுகொள்ளலாமா?
நான் என் தோல்வியை ஒப்புகொள்கிறேன் இளவரசர் அலி அவர்களே. ஆனால் தாங்கள் என் இறுதி முடிவிற்காக ஒரே ஒரு நாள் காத்திருக்க வேண்டும்.
தங்கள் விருப்பம் ஹுசூர்.



சிறிது நேரம் கழித்து தர்பாரில்...
அது எப்படி அவன் கீழ்த்தரமாக ஒரு வினா எழுப்பலாம்? என்னை அவன் அவமதித்துவிட்டான்.
அமைதியடையுங்கள் ஹுசூர், அவர் உங்களை அவமதிக்கும் நோக்கத்தில் செய்திருக்கமாட்டார்.
ஆனால் சுல்தானுக்கு கோபம் குறையவில்லை. அவனுக்கு ஒரு நல்ல யோசனை உதித்தது.
நான் அவனை நாளை பார்த்துக்கொள்கிறேன் அவனுக்கு தோல்வியின் ருசியை கொடுக்கிறேன்.
என்ன செய்ய போகிறீர்கள் ஹுசூர்.
சுல்தான் குறும்பாகச் சிரித்தார்.
அடுத்தநாள் காலையில் தர்பாரில்....
இளவரசர் அலி, உங்களின் திறமையை பாராட்டுகிறேன். ஆனால் நான் உங்களை மறுபடியும் பரீட்சிக்க விரும்புகிறேன்.
உங்களின் விருப்பம் சுல்தான் அவர்களே....


ஒருமுறை கூட தப்பு செய்யாத ஒருவரை தாங்கள் சுட்டிகாட்ட முடியுமா.
இளவரசர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார்.
ஹா ஹா... இளவரசர் அலி மீது சரியான ஒரு போடு போட்டார் சுல்தான்...
கவலை படாதீர்கள். உங்களுக்குத் தேவையான நேரத்தை எடுத்துகொள்ளுங்கள்.
அது அவனுக்கு நல்ல பாடத்தை கற்பிக்கும்.
இளவரசன் புன்னகைத்துக்கொண்டே சொன்னான்.
தேவையில்லை சுல்தான் அவர்களே, தவறே செய்யாத ஒரு மனிதனை நான் அறிவேன்.


சுல்தான் திகைத்துநின்றார்.
யார்? யாரவன் ? எங்கே வசிக்கிறான்?
எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள், நான் அவனை அழைத்து வருகிறேன்.
அரசவையை விட்டு வெளியே சென்ற இளவரசன், சிறிது நேரம் கழித்து ஒரு பெண்ணுடன் திரும்பி வந்தான்.
இவர்தான் அந்த மனிதரா?
அவன் இவரின் கருவறையில் இருக்கிறன்.
இது என்ன முட்டாள் தனம் ? அந்த குழந்தை இன்னும் பிறக்கவே இல்லையே ?
கண்டிப்பாக...இன்னும் பிறக்காத குழந்தை தான், வாய்ப்பே கிடைக்காததால், தவறு செய்திருக்கவே முடியாது.
சுல்தான் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு, இளவரசியை இளவரசன் அலிக்கு திருமணம் செய்து கொடுத்தான்.
முடிவு.




**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com www.indianvedicschool.com
+91 7337200273